பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு

போர் 1 பொள்ளாச்சி. 16—8—51. விலை அரையணு. 6-பக்கம். வெற்றி 27

கோவை ஜில்லா அரசியல் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டி அமைப்பில் ஸ்ரீ சி. சுப்ரமணியத்தைத் தலைவராக்கச் செய்தமுயற்சி தோல்வி

8-8-51 ல் பொள்ளாச்சித்தாலூக்கா டவுன் காங்கிரஸ்கமிட்டி மெம்பர்கள் அடங்கிய கூட்டம் தலைவர் ஸ்ரீ கோவிந்தசாமிக்கவுண்டர் தலைமையில் காங்கிரஸ் ஆபீஸில் நடைபெற்றது. கோவைஜில்லா அரசியல் மகாநாட்டை நெகமத்தில் நடக்க வேண்டுமென ஸ்ரீ பி. ஆர் கந்தசாமிக்கவுண்டர் எம். எல். ஏ. உள்பட சிலர்கோரினர்.

நெகமத்தில் தண்ணீர் கஷ்டம் அதிகம் என்றும் சுமார் 2—ஆயிரம் பிரதிநிதிகள் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் வசதியான இடம் இல்லை என்றும் தலைவர்கள் தங்குவதற்குகூட இடம் இல்லை என்றும், மகாநாடு நடத்த இடம் கிடையாது எனவும், எல்லாவகையிலும் மகாநாடு நடத்த ஏற்ற இடம் நெகமம் அல்லவென்றும், வேறு இடத்தில் நடத்த ஏற்பாடுசெய்யும்படியும் ஸ்ரீ பி. எஸ். வேலுசாமி கூறினர். அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ளாததால் மகாநாட்டை நெகமத்தில் நடத்த முடிவுசெய்யப்பட்டது. மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டித்தலைவராக கோவை ஸ்ரீ சி. சுப்ரமணியத்தைக் கொண்டுவர சிலர் முயற்சி செய்தனர். அதைப்பலர் ஒப்புக்கொள்ளாததால் அந்த முயற்சி தோல்வி அடைந்தது. பொள்ளாச்சித் தாலூக்கா காங்கிரஸ்கமிட்டித்தலைவர் ஸ்ரீ கோவிந்தசாமிக்கவுண்டரே வரவேற்புக் கமிட்டித் தலைவராகவும் இருக்க ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. காரியதரிசிகள் பொக்கிஷதார் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தக்கூட்டத்தில் ஜில்லா கமிட்டி காரியதரிசி ஸ்ரீ ரங்கசாமியும் கலந்து கொண்டார்.

நகர சபைக்கூட்டம்.

10—8—51 மாலை முனிசிபல் ஆபீஸில் வைஸ்சேர்மன் ஸ்ரீ மரியதாஸ் தலைமையில் கவுன்ஸிலின் சாதாரணகூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமதி ருக்மணிலக்ஷ்மிபதி அம்மையார் ஸ்ரீ பி. ஆர். கே. சர்மா இருவரும் காலஞ்சென்றது குறித்து வருத்தம் தெரிவித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டவுனில் ஓர் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்தக்கோரியும் அதற்காக ஜில்லாமாஜிஸ்ட்ரேட்டை பேட்டிகாண ஒரு தூதுகோஷ்டியும ஏற்படுத்தப்பட்டது. பல ரோடுகள் போட டெண்டர்கள் அங்கீகரிக்கப்பட்டது பல எஸ்டிமேட்டுகள் சாங்ஷன் செய்யப்பட்டது. மற்றும்பல விஷயங்கள் முடிவுசெய்யப்பட்டன.

ஜில்லாகமிட்டிகூட்டம்

கோவை ஜில்லா காங்கிரஸ்கமிட்டியின் கூட்டம் 26—8—51 ல் உடுமலைப்பேட்டையில் நடைபெறும் என ஜில்லாகமிட்டிக்காரியதரிசிஸ்ரீபி. எஸ். ரங்கசாமி அறிவிக்கிறார்.

சுதந்திர தினம்!

"பொள்ளாச்சி வாசி" யின் வாசகர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது சுதந்திர தின வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஆசிரியர்.

சுதந்திர தின விருந்து.

எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம், லலிதா—பத்மினி, பாண்டியன், புளிமூட்டை ராமசாமி முதலியோர் நடிப்பது. டைரெக்ஷன்: என். எஸ். கிருஷ்ணன்.

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு வினியோக உரிமையாளர்கள்:—

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்.

தபால்பெட்டி 126. 224, ராஜவீதி, கோயமுத்தூர்.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி [illegible]—8—51. வியாழன்.

சுதந்திர தினம்.

நாடு சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டு ள் பூர்த்தி அடைந்து ஐந்தாவது ஆண்டு ஆரம்பமாகிறது ...டுக்கு விடுதலை என் வுடனே நம் ம... ஆனந்தக்கடலில் மூ கினர். து... நம் ... நது என்றனர். கஷ் ம் காற்றாய் பற... து என எண்ணினர். ...றுமை, வேலையில்லாமை, பா குபாடு, ...தால்லை, தொந்தி... வு போயின என்றனர். நாட்டிலே தேனும் பாலும் ஓடும் என்று எண்ணினர். ஆனால் இன்றைய நிலை சுதந் திரத்தின் சாயலைக்கூடக்காணோம். அந்நி யன் ஆட்சிசெய்த காலத்தில் அனுபவித் த கஷ்டத்தைவிட இன்று அவதிப்படுகின் றனர். அதிகாரிகளின் அவமதிப்பும், இரு மாப்பும், அசிரத்தையும் இன்றுள்ளமாதிரி ஆங்கியன் கால...த்தில் இல்லை. லஞ்சத்தின் தாண்டவம் இ... உச்சநிலை எய்துவிட் ...து. உணவு கஷ்...ம் சொல்லிமுடியாது. ஆங்கிய ஆட்சியே இங்கு திரும்பிவந்தா லும் பரவாயில்லை என்று பாமரமக்கள் எ ண்ணும் நிலக்கு சூழ்நிலையை உண்டாக்கி யிருகின்றனர்

இந்தக்கஷ்டங்கள் அத்தனையும் இந்த ஐந்தாவது ஆண்டிலாவது மாறுமா? மக்க ள் மனநிம்மதிபெறுவார்களா? வாழ்க்கைத் தரம் உயருமா? என்றால் அந்த நம்பிக்கை ஏற்படமறுக்கிறது. இந்நிலையில் நாட்டில் பொதுத்தேர்தல்கள் வரவிருக்கிறது. தே ர்தலில் வெற்றி காங்கிரஸிற்குத்தான் என் று தேசபக்தர்கள் இறுமாப்புடன் இருக்கி ன்றனர். ஆம் வெற்றி நமதே. அதில் சந் தேகமே இல்லை. ஆனால் நாட்டிற்கு சுதந் திரம் வாங்கித்தந்த தியாக மூர்த்திகளே திரம்பட நடத்தி வந்த காங்கிரஸ் ஸ்தாப னத்தை இன்று அதன் ஒப்பற்ற தலைவர் கள் என்று சொல்லிவந்த நேருஜி, கிருப ளானி, கித்வாய், அஸாத், தாண்டன் போன் ற தலைவர்களே தங்களுக்குள் அதிக்கப்போட் டி போட்டுக்கொண்டு ஜனநாயகத்தின் பெய ரால் தங்கள் சர்வாதிகாரங்களை நடத்திகாங்கி ரஸைக்கு... தோண்டிப் புதைத்துவிடுவார்கள் போலிருககிறது. காங்கிரஸைத்தலைப்பதற்கு எதிர்கட்சிகள் நாட்டிலே கிடையாது. ஆனால் அதன் தலைவர்களே அந்த ஸ்தாபனத்தைத் தீர்த்துக்கட்டிவிடுவார்கள் போலிருக்கிறது. பதவிப்பித்தும், அதிகார ஆசையும், கோஷ்டி மனப்பான்மையும், சர்வாதிகாரப் போக்கும் காங்கிரஸ் தலைவர்களிடமிருந்து நீலந்து காங்கிரஸ் ஸ்தாபனம் என்றும் போல் பலம் பொருந்தியதாக மக்களிடம் வேலைசெய்ய ஐந்தாவது ஆண்டிலாவது ஆண்டவன் அருள் புரிய சுதந்திர நன்னாளில் பிரார்த்தனை செய் கிறோம்.

வருந்துகிறோம்.

8-5-51 ல் கோவை ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்ட ரின் தாயார் வேட்டக்காரன்புதூரில் கால மானார்கள். அன்னாருக்கு வயது 80. நமது அனுதாபத்தை ஸ்ரீ வி. கே. பி கவுண்ட ருக்கும் அவரின் சகோதரர்களுக்கும் தெ ரிவித்துக்கொள்கிறோம்.

“சுதந்திரம்” வாழ்க!

“இளங்கதிர்”

அடிமைத்தொல்லையிலே அவதிப்பட்டு
அடிமையற வீரர்கள் கஷ்டப்பட்டு
படிமிசை கண்டதுண்டு சுதந்திரத்தை
பார்த்திட்டோம் நான்காண்டு (நிறை)
வந்ததிந்நாள்

கை ஒடியக் கால் ஒடிய எங்குமவர்
கன்னங்கள் சிவக்க ரத்தக்கடல்
தையலாரும் பங்குகொள்ளஉரிமைதானும்
திரண்டதோர் சக்தியில் சுதந்திரம்
பெற்றோம்

சுதந்திரத்தின் தத்துவம் நிறைவுகாணோம்
சலித்த நிலைமக்களுக்கே காணுகின்றோம்
இதந்தரும் நாளும் விரைவில் காண்போம்
இன்னலற இன்பத்துள் எங்கும்
வாழ்வோம்

மடமைபோகும் பொறுப்பு வரும்
மாண்பு கொள்ளச் சுதந்திரமும்
வலிவு தரும்
உழைப்புத்தேவை, எங்குமே உயர்வுமேற
உணவு வரும், உண்மை அறிவெங்கும்
காணும்

அழைத்திடும் நாளின்று சுதந்திரத்தில்
அறிவீரே பொறுப்புணர்ச்சி வெற்றி
பெற

தேவை;

கீழ்க்கண்ட வேலைகளுக்கு பயிற்சிபெற்றவர்களிடமிருந்து வயது, ஜாதி, படிப்பு முத லிய விவரங்களுடனும் யோக்யதாம்சபத்திரங்களுடனும் (General & iechnecal) மனுக்கள் வேண்டப்படுகின்றன. ஜில்லாபோர்டு நிர்ணய சம்பளமும் வழக்கமான பஞ்ச ப்படியும் கொடுக்கப்படும்.

1. எல். டி., பீ. டி., பி ஈ. டி. (ஆண்களும் பெண்களும்.)
   (கணிதம், பௌதீகம், ரசாயனம், சரித்திரம்.)
   (பயிற்சிபெறாத பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்)
2. தமிழ்ப்பண்டிதர்கள்.
3. தேகப்பயிற்சி ஆசிரியர்களும், ஆசிரியைகளும்.
4. டிராயிங் மாஸ்டர்கள்.
5. ஹிந்தி பண்டிதர்கள்.
6. தேகப்பயிற்சி டைரெக்டர்கள்.
7. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்.

விண்ணப்பங்கள் யாவும் 25—8—51 ம் தேதிக்குள் கோயமுத்தூர் ஜில்லாபோர்டு தலைவருக்கு வந்துசேரவேண்டும்.

ஜில்லாபோர்டு அலுவலகம்,
3—8—51.

தலைவர்,
ஜில்லாபோர்டு, கோயமுத்தூர்.

கேள்வி--பதில்.

(பர்ஸாத்.)

(கேள்வி எழுதி அனுப்புவோர் தங்களின் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதியனுப்பவேண்டும். இப்பகுதியில் வெளிவரும் கேள்விகளுக்கு பொறுப்பு கேள்வி கேட்போரைச் சார்ந்ததுதான்.)

கே: சமூகத்தைப்பற்றி உங்கள் எண்ணம் என்ன?

(நளினி.)

ப: சமூகம் சதிகாரர்களின் சதுராட்டம் வீணர்களின் விளையாட்டு!

கே: எனது நண்பர் ஒருவருக்குகாதலைப்பற்றிய கற்பனை அதிகம்! இதற்கு என்ன செயவது?

(ஜே. தாமஸ்.)

ப: கற்பனையைக் கண்ட்ரோல் செய்யவேண்டும். மீறில் சென்னை கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்.

கே: புரட்சியிலிருந்தும் போராட்டத்திலிருந்தும் நன்மை பிறந்ததாகவே சரித்திரம் கூறுகிறது. அப்படியிருக்க தற்காலத்தில் அப்புரட்சியையும் போராட்டத்தையும் ஏன் வெறுக்கிறார்கள்?

(பி. எஸ். வெங்கிட்டு)

ப: சரித்திரம் கூறுவது உண்மைதான். ஆனால் இக்காலத்தில் கொலைசெய்வதும், கொள்ளையடிப்பதும், ரயில் தண்டவாளத்தை உடைப்பதும், தந்திக்கம்பிகளை அறுப்பதும்தான், புரட்சியும்போராட்டமுமாக கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் வெறுக்கிறார்கள்.

கே: நம் பார்க் லைப்ரரியில் "ஆரிய மாயை" என்ற புத்தகத்தை படிப்பதற்கு கொடுக்கின்றனர். அப்படியானால் அரசாங்கம் தடையை நீக்கிவிட்டார்களா? புஸ்தக விற்பனைக்கு தடையா? இலவசமாகப் படிப்பதற்குத்தடையா? இல்லையா? அரசாங்க சட்டத்தை முனிசிபாலிட்டியார் மீறலாமா?

(ஏ. ராமசாமி.)

ப: இவ்வளவுக் காரணம் நிர்வாகக் கோளாறுதான்.

கே: திராவிடர்கள் திட்டுகிறார்கள், காங்கிரஸ்காரர்கள் கவனிப்பதில்லை. இந்தலட்சணத்தில் தமிழரசு ஏன்?

(திராவிடப்பிரியன்)

ப: திட்டுவதே திட்டமெனத்திரியும் திராவிடர்கள் திட்டுவதினால் காங்கிரஸ்காரர்கள் கவனிப்பதில்லை என்ற அர்த்தமா? தமிழ், மொழி, கலை, நாகரீகம் இவைகள், தனிச்சிறப்புடன் தமிழ்நாட்டில் தழைத் தோங்கவேண்டும் என்பதற்குத்தான் தமிழரசு!

கே: 5-ம் தேதி தேர்நிலையில் நடக்கும் கூட்டத்திற்கு திராவிடத் தந்தை ஈ. வெ. ரா. வருவதாக திராவிட இளங்காளைகள் தெரிவித்தனர். ஆனால் அன்றுநடந்த கூட்டத்திற்கு ஈ வெ. ரா. வரவில்லை அவர் வராத காரணம் என்ன? ஒரு சமயம் வருவதற்கு பயந்து கொண்டாரோ?

(ஆர். நடராஜன்.)

ப: அன்று ஈ. வெ. ரா. வின் நெருங்கிய உறவினர் காலம் சென்றுவிட்டதால் தான் வரவில்லை என்று தெரிகிறது.

கே: பெரியாரின் சீர்திருத்தம் எது? அண்ணாத்துரையின் சீர்திருத்தம் எது?

(சீனிவாச ராவ்)

ப: 5-லட்சம் ரூபாய்களை நிதியெனத்திரட்டி மணியம்மையைச் சதியாக்கிக்கொண்டு மகிழ்வுடன் உல்லாசம் வருவது பெரியாரின் சீர்திருத்தம்! கழகநிதிக்கென கண்ட இடத்தில் கட்டணம்போட்டு கூத்தாடி கும்மாளமடித்து ஊரை ஏமாற்றுவது அண்ணாத்துரையின் சீர்திருத்தம்!

கே: கோவைஜில்லாவிலே புகழ்பெற்ற ஜீ டி நாயுடு அவர்கள் எல்லாருடைய நன்மதிப்பையும் பெற்று அரசாங்கத்தின் நன்மதிப்பைப்பெறாதது ஏன்?

ப: அரசாங்கத்தின் நன்மதிப்பை பெறவில்லையென எப்படி சொல்லமுடியும்?

கே: பாதாளபைரவி பற்றி தங்கள் அபிப்பராயம் என்ன?

(லலிதாமணி)

ப: கதைக்கு முக்கியத்துவம்கொடுத்து, நடிகர்களின் நடிப்பை சோபிக்காமல் தடுத்து, அழகான தமிழ் வசனங்களின் உச்சரிப்பைக்கெடுத்து, சிறந்த பாட்டுகளைவிடுத்து, பிரமாதமான செட்டிங்ஸ்களை எடுத்து படத்தைப் பிடித்துவிட்டார்கள்

கே: உண்மைக் காதலர்களைப்பற்றி நீர் என்ன சொல்கிறீர்கள்?

(பி. வேலுச்சாமி)

ப. இறகில்லாப்பட்சிகள்.

நேயர் தபால்.

முனிசிபல் குமாரபாளையம் வாசகசாலையில் படிக்கவரும் என்போன்ற தொழிலாளர்களுக்கு மிகவும் இடஞ்சல்களாக உள்ளது. பல கட்சி ஆட்கள் கூடிக்கும்மாளம் அடிப்பதும் கட்சிப்பிரச்சாரம் செய்வதும், வாசகசாலைக்கு வராத கீழ்த்தரமான பத்திரிகைகளை வாங்கி மேஜையில் வைத்து அதைப்படிக்க வரும் என்போன்றவர்களின் பார்வைக்குவைப்பதும் இன்னும் இவர்கள் [illegible]ம் சப்தம் தேசீயத்தை பற்றி குறைவாகப்பேசுவதும்; காங்கிரஸ் என்றால் கழுதைகள் கூட்டம் என்று பல சோஷலிஸ்ட் தோழர்கள் பேசுவதை என் கண்முன்னால் பார்த்தேன். இதுபோன்ற சில்லரைச் செயல்களை கவனிக்கவேண்டுகிறேன்.

பா. காளிமுத்து.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

ஓர் வேண்டுகோள்.
குறைந்த வாடகையில் மின்சார விளக்குகள் ஒலிபெருக்கி, மின்சாரம் இல்லாத இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படு.
M. சுப்பையகவுண்டர்,
தலைவர்,
மோட்டார் தொழிலாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கு 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:- **S. R. Chandran.**

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,

பழனி

ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.